*සබරගමුව පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව*

**සබරගමුව පළාත් රාජ්‍ය කළමනාකරණ සේවා නිලධාරි සේවයේ III ශ්‍රේණියට බඳවා ගැනීමේ විවෘත තරග විභාගය - 2026**

1. සබරගමුව පළාත් රාජ්‍ය කළමනාකරණ සේවා නිලධාරි සේවයේ III ශ්‍රේණියේ තනතුරු සඳහා බඳවා ගැනීමේ විවෘත තරග විභාගය, විභාග කොමසාරිස් ජනරාල් විසින් 2026 දෙසැම්බර් මස පවත්වනු ලබන බව මෙයින් නිවේදනය කරනු ලැබේ.

<u>සැලකිය යුතුයි</u>
**මෙම විභාගය ඒකාබද්ධ රාජ්‍ය සේවයේ කළමනාකරණ සේවා නිලධාරී සේවයේ III ශ්‍රේණියට බඳවා ගැනීමේ විවෘත තරග විභාගය හා ඒකාබද්ධව එක් විභාගයක් ලෙස පැවැත්වෙන අතර, සේවාවන් දෙකටම සුදුසුකම් ලබන අයදුම්කරුවන් හට සිය මනාපය පරිදි එක් සේවාවවක් තෝරා ගැනීමට අවස්ථාව සලසා දෙනු ලැබේ.**

ඒ සඳහා වන අයදුම්පත ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ www.doenets.lk වෙබ් අඩවියේ "Our Services" යටතේ ඇති "Online Applications – Recruitment Exams/E.B. Exams" ඔස්සේ පළ කර ඇති අතර අයදුම්පත් ඉදිරිපත් කළ හැක්කේ මාර්ගගත ක්‍රමයට (Online) පමණි. අයදුම්පත් භාරගන්නා අවසාන දිනය 2026.10.09 දින වේ.

අයදුම්පත මාර්ගගතව යොමු කළ පසු එය බාගත කර මුද්‍රිත පිටපතෙහි අයදුම්කරු විසින් අත්සන් තබා, අයදුම්පත් භාර ගන්නා අවසන් දිනට හෝ ඊට පෙර **"ලේකම්, පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව, සබරගමුව පළාත් සභාව, නවනගරය, රත්නපුර"** යන ලිපිනයට ලැබෙන සේ ලියාපදිංචි තැපෑලෙන් එවිය යුතුය.

අයදුම්පත බහා එවන කවරයේ වමත් පස ඉහළ කෙළවරේ "සබරගමුව පළාත් රාජ්‍ය කළමනාකරණ සේවා නිලධාරී සේවයේ III ශ්‍රේණියට බඳවා ගැනීමේ විවෘත තරග විභාගය -2026" යන්න හා ඔබ පදිංචි දිස්ත්‍රික්කය ද සඳහන් කරන්න.

සටහන - මාර්ගගත අයදුම්පත් භාරගැනීම 2026.09.14 දින පෙ.ව. 9.00ට විවෘත වන අතර 2026.10.09 දින ප.ව. 9.00ට අවසන් වේ.

මෙම විභාගය පහත නගරවල පිහිටුවන ලබන විභාග මධ්‍යස්ථානවලදී පමණක් පවත්වනු ලැබේ. සියලු අයදුම්කරුවන් විභාගයට පෙනී සිටීමට බලාපොරොත්තු වන නගරය තෝරාගත යුතු අතර මාර්ගගත අයදුම්පත සම්පූර්ණ කිරීමේදී විභාගයට පෙනී සිටීමට අපේක්ෂිත නගරය හා ඊට අදාළ නගර අංකය නිවැරදිව සඳහන් කළ යුතුය.

| **නගරය** | **නගර අංකය** |
|---|---|
| රත්නපුර | 24 |
| කෑගල්ල | 25 |

2. විභාග කොමසාරිස් ජනරාල් විසින් පවත්වනු ලබන ලිඛිත පරීක්ෂණයක ප්‍රතිඵල පදනම්කරගනිමින් කුසලතා අනුපිළිවෙළ මත සුදුසුකම් සපුරා ඇති අපේක්ෂකයන් සාමාන්‍ය සම්මුඛ පරීක්ෂණයකට භාජනය කර රාජ්‍ය පරිපාලන චක්‍රලේඛ අංක 15/90 අනුව දිස්ත්‍රික් ජනගහන අනුපාත පදනමින් සබරගමුව පළාත් රාජ්‍ය කළමනාකරණ සේවා නිලධාරී සේවයේ III ශ්‍රේණියේ තනතුරු සඳහා පත් කිරීමට තෝරා ගනු ඇත.

3. (අ) පත් කරනු ලබන සංඛ්‍යාව හා පත්වීම් ක්‍රියාත්මක වන දිනය පත්කිරීමේ බලධාරයා විසින් නිශ්චය කරනු ලැබේ. කිසියම් පුරප්පාඩු සංඛ්‍යාවක් හෝ පුරප්පාඩු සියල්ලම පිරවීම හෝ නොපිරවීමට පත්කිරීමේ බලධාරයාට බලය ඇත.

(ආ) රාජ්‍ය සේවයේ පත්වීම් පාලනය කෙරෙන පොදු කොන්දේසිවලට ද සබරගමුව පළාත් රාජ්‍ය කළමනාකරණ සේවා නිලධාරි සේවා ව්‍යවස්ථා සංග්‍රහයේ පනවා ඇති නියම හා කොන්දේසිවලට ද එම ව්‍යවස්ථාවට කර ඇති හෝ මින්මතු කෙරෙන හෝ සංශෝධනවලට ද ආයතන සංග්‍රහයේ හා මුදල් රෙගුලාසි විධිවිධානවලට ද යටත්ව තෝරාගනු ලබන අපේක්ෂකයකු සබරගමුව පළාත් රාජ්‍ය කළමනාකරණ සේවා නිලධාරි සේවයේ III ශ්‍රේණියට පත් කරනු ලැබේ.

(ඇ) මෙම පත්වීම අවුරුදු තුනක පරිවාස කාලයකට යටත් වේ. සබරගමුව පළාත් රාජ්‍ය කළමනාකරණ සේවා නිලධාරි සේවයේ III ශ්‍රේණියට බඳවා ගෙන වසර තුනක් (03) ඇතුළත සේවා ව්‍යවස්ථාවේ සඳහන් පරිදි පළමුවැනි කාර්යක්ෂමතා කඩඉම් පරීක්ෂණය සමත් විය යුතුය.

(ඈ) පත්වීමක් සඳහා තෝරාගනු ලැබුවහොත් ඔබ පත්වීම සඳහා සුදුසුකම් සපුරාලූ භාෂා මාධ්‍යයට අනුව 2020.10.16 දිනැති රාජ්‍ය පරිපාලන චක්‍රලේඛ අංක 18/2020 සහ ඊට ආනුෂාංගික චක්‍රලේඛවල සඳහන් විධිවිධාන අනුව ඔබ විසින් අදාළ පරිදි රාජ්‍ය භාෂා ප්‍රවීණතාව සම්පූර්ණ කළ යුතු වේ.

4. 2025.03.25 දිනැති අංක 10/2025 දරන රාජ්‍ය පරිපාලන චක්‍රලේඛයෙහි MN 02-2025 වැටුප් කේතය මෙම තනතුරට හිමි වන අතර එයට අදාළ වැටුප් පරිමාණය රු. 48,470 - 10x540 - 11x630 - 10x1,010 - 10x1,190 – 82,800/- ක් වන අතර පත්වීමක් සඳහා තෝරාගනු ලබන අයදුම්කරුවකුට එම වැටුප හිමිවන්නේ 2027.01.01 දින සිට වන අතර පත්වීම ක්‍රියාත්මකවන දින සිට මෙම චක්‍රලේඛයේ උපලේඛන III හි විධිවිධාන පරිදි වැටුප් ගෙවනු ලැබේ.

5. මෙම තනතුර ස්ථිරය. විශ්‍රාම වැටුප් සහිතය. තවද ඔබ වැන්දඹු හා අනත්දරු විශ්‍රාම වැටුප් ක්‍රමයට/වැන්දඹු පුරුෂ හා අනත්දරු විශ්‍රාම වැටුප් ක්‍රමයට දායක විය යුතු ය. රජය මඟින් විටින් විට නියම කරනු ලබන ආකාරයට ඔබ විසින් ඒ සඳහා දායක මුදල් ගෙවිය යුතු ය.

6. සුදුසුකම් :-

සබරගමුව පළාත් රාජ්‍ය කළමනාකරණ සේවා නිලධාරි සේවයේ III ශ්‍රේණියේ තනතුරුවලට බඳවා ගැනීම සඳහා පහත සඳහන් සුදුසුකම් අදාළවේ.

(අ) අයදුම්කරු ශ්‍රී ලංකා පුරවැසියකු විය යුතු අතර අයදුම්පත් භාර ගන්නා අවසාන දිනයට පූර්වයෙන් වූ අවුරුදු පහක් (05) ඇතුළත ඔහු/ ඇය එම දිස්ත්‍රික්කය තුළ යටත් පිරිසෙයින් අවුරුදු තුනක් (03)වත් අඛණ්ඩව ස්ථිර වශයෙන් පදිංචිව සිටි අයකු විය යුතු අතර, එසේ වසර 03ක අඛණ්ඩ ස්ථිර පදිංචිය අයදුම්කරුට නොමැත්තේ නම් අයදුම්පත් කැඳවනු ලබන දිනට පූර්වාසන්න වසර 03ක කාලය තුළ අයදුම්කරුගේ කලත්‍රයා සබරගමුව පළාතේ ස්ථිර පදිංචිකරුවකු විය යුතුය.

(ආ) අයදුම්පත් භාරගන්නා අවසාන දිනට වයස අවුරුදු 18 ට නොඅඩු හා අවුරුදු 35 ට නොවැඩි විය යුතුය. (ඒ අනුව 2008.10.09 දින හෝ ඊට පෙර හා 1991.10.09 දින හෝ ඊට පසු උපන් දිනය යෙදී ඇති අයට පමණක් මේ සඳහා අයදුම් කිරීමට සුදුසුකම් ඇත.)

(ඈ) විශිෂ්ට චරිතයකින් යුක්ත විය යුතුය.

(ඈ) සෑම අපේක්ෂකයකුම සබරගමුව පළාත තුළ ඕනෑම ප්‍රදේශයක සේවය කිරීමටත්, තනතුරේ රාජකාරි ඉටු කිරීමටත් ප්‍රමාණවත් ශාරීරික හා මානසික යෝග්‍යතාවකින් යුක්ත විය යුතුය.

(ඉ) පහත සඳහන් අධ්‍යාපන සුදුසුකම් සම්පූර්ණ කර තිබිය යුතුය.

1. භාෂාව (සිංහල/දෙමළ/ඉංග්‍රීසි) සහ ගණිතය ඇතුළුව විෂයයන් හතරකට (04) සම්මාන සාමර්ථ්‍යයන් සහිතව
   <u>**එක්වරකදී**</u> විෂයයන් හයකින් (06) අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය සමත්ව තිබීම.

සහ

2. අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගයේදී (සාමාන්‍ය පොදු පරීක්ෂණය හා සාමාන්‍ය ඉංග්‍රීසි හැර) සියලුම විෂයයන්ගෙන් <u>එකවර</u> සමත්ව තිබීම.

සටහන -

i. අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගයේදී සම්මාන සාමර්ථ්‍යයක් ලබා තිබිය යුතු භාෂාව ලෙස සලකනු ලබන්නේ අයදුම්කරු මෙම තරග විභාගය සඳහා ඉදිරිපත් වන භාෂා මාධ්‍යය වේ.

ii. අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) සහ අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගයට සමාන, වෙනත් දේශීය හෝ විදේශීය අධ්‍යාපන ආයතන මඟින් පවත්වනු ලබන විභාගයකට පෙනී සිට ලබාගෙන ඇති සුදුසුකමක් පත්වීම ලබා දීම සඳහා අදාළ කර ගැනීම පිළිබඳ අවසන් තීරණය අදාළ අධ්‍යාපන ආයතනවලින් සහ විභාග කොමසාරිස් ජනරාල්වරයාගෙන් තහවුරු කර ගැනීමෙන් පසු සබරගමුව පළාත් ගරු ආණ්ඩුකාරතුමිය විසින් ගනු ලැබේ.

සැලකිය යුතුයි - සෑම අපේක්ෂකයකුම තනතුරට අදාළ සියලු සුදුසුකම් 2026.10.09 දින හෝ ඊට පෙර සම්පූර්ණ කර තිබීම අනිවාර්ය වේ.

7. මෙම තරග විභාගය මඟින් සම්පූර්ණ කිරීමට නියමිත පුරප්පාඩු සංඛ්‍යාවෙන් 3%ක් ආබාධ සහිත පුද්ගලයන් සඳහා වෙන් කෙරෙනු ඇත. විභාගයේදී සුදුසුකම් ලබන ආබාධිත අයදුම්කරුවන් අතරින් ඉහළ ලකුණු මට්ටමේ 3%ක ප්‍රතිශතයක් පමණක් කුසලතා අනුපිළිවෙළ අනුව පත්වීම් ලබා දීම සඳහා තෝරා ගැනෙනු ඇත. මේ සඳහා සුදුසුකම් ලැබීමට විභාගයේ එක් එක් විෂයය සඳහා වෙන් කර ඇති ලකුණුවලින් යටත් පිරිසෙයින් සියයට හතළිහක් (40%) අපේක්ෂකයා විසින් ලබා ගත යුතු අතර, විභාගයේ මුළු ලකුණු ගණනින් යටත් පිරිසෙයින් සියයට පනහක් (50%) ලබා ගත යුතු වේ. රාජ්‍ය පරිපාලන චක්‍රලේඛ අංක 27/88 හි විධිවිධාන ආබාධිත පදනමින් බඳවා ගැනීම සඳහා අදාළ වේ.

ආබාධ සහිත පුද්ගලයන් සඳහා වෙන්කෙරෙන පුරප්පාඩු සඳහා අයදුම් කර සම්මුඛ පරීක්ෂණය සඳහා සුදුසුකම් ලබන අයදුම්කරුවන්, සුදුසුකම් පරීක්ෂා කිරීමේ සාමාන්‍ය සම්මුඛ පරීක්ෂණයට අමතරව වෛද්‍ය පරීක්ෂණ මණ්ඩලයක් වෙත ද ඉදිරිපත් කරනු ලබන අතර වෛද්‍ය පරීක්ෂණ මණ්ඩලයේදී ආබාධිත අයදුම්කරුවකු නොවන බවට හෝ ආබාධිත පදනම යටතේ පත්වීම් ලබාදීමට සුදුසුකම් නොලබන බවට නිර්දේශ කරන අයදුම්කරුවන් පත්වීම් සඳහා සුදුසුකම් නොලබන බව සැලකිය යුතු වේ.

සටහන - මෙම විභාගය සඳහා විශේෂ අවශ්‍යතා සහිත අයදුම්කරුවන් ඉදිරිපත් වන්නේ නම් ඒ බව මාර්ගගත අයදුම්පත සම්පූර්ණ කිරීමේදී අනිවාර්යයෙන් අදාළ පරිදි තමා ආබාධිත කොන්දේසි යටතේ අයදුම් කරන බව සඳහන් කළ යුතු අතර අදාළ වෛද්‍ය සහතිකවල පිටපත්, අයදුම්පතේ මුද්‍රිත පිටපතක් සමග ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව වෙත ඉදිරිපත් කළ යුතුය. ආබාධිත නොවන අයෙකු සාවද්‍ය ලෙස ආබාධිත යැයි සඳහන් නොකළ යුතුය.

8. විභාග පටිපාටිය :-

(අ) මෙම විභාගය සිංහල, දෙමළ සහ ඉංග්‍රීසි මාධ්‍යයන්ගෙන් පැවැත්වේ. අයදුම්කරුවකු තමාට අදාළ එක් මාධ්‍යයක් තෝරා ගත යුතු අතර විභාගයට නියමිත සියලුම ප්‍රශ්න පත්‍ර සඳහා එම මාධ්‍යයෙන්ම පිළිතුරු සැපයිය යුතුය. ඉල්ලුම් කරන මාධ්‍ය පසුව වෙනස් කිරීමට ඉඩ දෙනු නොලැබේ. විභාගය ප්‍රශ්න පත්‍ර දෙකකින් යුක්ත වේ.

| | | ලකුණු | කාලය |
|---|---|---|---|
| 01 | භාෂා හැකියාව | 100 | පැය 2 ½ |
| 02 | අභියෝග්‍යතාව | 100 | පැය 01 |

(01) භාෂා හැකියාව :

මෙම ප්‍රශ්න පත්‍රය අපේක්ෂකයන්ගේ අදහස් ප්‍රකාශනය, අවබෝධය, අක්ෂර වින්‍යාසය, භාෂා හා රචනය, දෙන ලද ලිපියක් කෙටුම්පත් කිරීම, සපයා ඇති දත්ත අනුව ප්‍රස්තාර වගු සකස් කිරීම, දී ඇති පාඨ සාරාංශ කිරීම, දී ඇති වාක්‍ය කිහිපයක අදහස් තනි වාක්‍යයකින් ලිවීම සහ සරල ව්‍යාකරණ භාවිතය පිළිබඳ දැනුම පරීක්ෂා කෙරෙන විෂයානුබද්ධ ප්‍රශ්නවලින් සමන්විත වේ. ප්‍රශ්න සියල්ලටම පිළිතුරු සැපයිය යුතුය.

(02) අභියෝග්‍යතාව :

මෙම ප්‍රශ්න පත්‍රය අපේක්ෂකයන්ගේ සංඛ්‍යාමය හැකියාව, තර්කන ශක්තිය, සාමාන්‍ය බුද්ධිය මැනෙන අයුරින් සැකසෙන ප්‍රශ්නවලින් සමන්විත වේ. බහුවරණ හා කෙටි පිළිතුරු මාදිලියේ ප්‍රශ්න 50 කින් සමන්විතය. ප්‍රශ්න සියල්ලටම පිළිතුරු සැපයිය යුතුය.

සටහන :- රාජකාරි කටයුතු සඳහා අපේක්ෂකයන්ගේ සුදුසුකම් හා හැකියාව පරීක්ෂා කිරීම පිණිස මෙම ප්‍රශ්න පත්‍ර සකස් කෙරේ.

(ආ) මෙම තරග විභාග මඟින් පත්වීම් ලැබීමට සුදුසුකම් ලැබීම සඳහා එක් එක් විෂය සඳහා වෙන් කර ඇති ලකුණුවලින් යටත් පිරිසෙයින් සියයට හතළිහක්වත් (40%) අපේක්ෂකයන් විසින් ලබා ගත යුතු අතර, විභාගයේ මුළු ලකුණු ගණනින් යටත් පිරිසෙයින් සියයට පනහක්වත් (50%) ලබා ගත යුතු වේ. තරග විභාග සඳහා වෙන්කොට ඇති පුරප්පාඩු සංඛ්‍යාව සපුරාලන පරිදි ලබා ගත් ලකුණු අනුපිළිවෙළ තරයේම අනුගමනය කරමින් පත්වීම් දෙනු ලැබේ.

(ආ) විභාග ප්‍රතිඵල - අයදුම්කරුවන් වෙත විභාග ප්‍රතිඵල දැනුම්දීම විභාග කොමසාරිස් ජනරාල් විසින් තැපෑලෙන් හෝ www.results.exams.gov.lk වෙබ් අඩවිය මගින් සිදුකෙරෙනු ඇත.

9. සාවද්‍ය තොරතුරු සැපයීමට දඬුවම්

i. අයදුම්පත පිරවීමේදී ඉතා සැලකිලිමත්ව නිවැරදි තොරතුරු සැපයිය යුතුය. මෙම විභාගයට අදාළ රෙගුලාසි අනුව කිසියම් අපේක්ෂකයකු ඊට පෙනී සිටීමට නුසුදුසු වෙතැයි පෙනී යන නම්, විභාගයට පෙර හෝ විභාගය පැවැත්වෙන අතර හෝ ඊට පසු හෝ යන කවර අවස්ථාවකදී වුව ද ඔහුගේ/ඇයගේ අපේක්ෂකත්වය අවලංගු කරනු ලැබිය හැකිය.

ii. අපේක්ෂකයකු විසින් සපයන ලද තොරතුරු පසු කලකදී වැරදි බව පෙනී ගියහොත් හෝ ඔහු/ඇය විසින් හිතාමතා කිසියම් කරුණක් වසන් කරන ලද බව හෙළිවුවහොත් හෝ ඔහුට/ ඇයට තවදුරටත් පත්වීම් ලබා දීම සම්බන්ධයෙන් සලකා බලනු නොලැබෙන අතර මෙම විභාගය හේතු කොට ගෙන දී තිබූ පත්වීමක් අහෝසි කිරීමට හෝ රජයේ සේවයෙන් පහ කිරීමට වුව ද යටත් වේ.

10. විභාග කොන්දේසි

(i) මාර්ගගත (Online) විභාග අයදුම්පත ඉංග්‍රීසි භාෂාවෙන් සම්පූර්ණ කළ යුතුය. මාර්ගගත අයදුම්පත සම්පූර්ණ කිරීමට පෙර විභාගය සඳහා අයදුම් කිරීම වෙනුවෙන් සකසා ඇති පොදු උපදෙස් පත්‍රිකාව (Common Instructions) බාගත කර, කියවා, අයදුම්පත පිරවීමේදී එම උපදෙස් නිවැරදිව පිළිපැදිය යුතුය. අසම්පූර්ණ අයදුම්පත් දැනුම් දීමකින් තොරව ප්‍රතික්ෂේප කරනු ලැබේ. අයදුම්කරු විසින් මාර්ගගතව යොමු කරන ලද මුද්‍රිත පිටපත වළංගු අයදුම්පතක් බවට ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව විසින් භාරගන්නා ලද බව/භාර නොගන්නා බව පද්ධතියට ප්‍රවේශ වීමට භාවිත කරන ලද ජංගම දුරකථන අංකයට කෙටි පණිවුඩයක් (SMS) මගින් හෝ විද්‍යුත් තැපැල (E-mail) ලිපිනයට හෝ දැනුම් දෙනු ලැබේ.

(ii) විභාග ගාස්තුව රු. 600/- කි. විභාග ගාස්තු ගෙවීමේදී මාර්ගගත පද්ධතියෙන් ලබාදෙන පහත ගාස්තු ගෙවීමේ ක්‍රමවේද යටතේ පමණක් ගෙවීම සිදු කළ යුතුය.

i. ඕනෑම බැංකු ණය කාඩ්පතක් මගින් (Any Bank Credit Card)

ii. ඕනෑම බැංකු හර කාඩ්පතක් මගින් (Any Bank Debit Card)

iii. ලංකා බැංකු මාර්ගගත බැංකු ක්‍රමය/ Flex යෙදුම මගින් (Bank of Ceylon Online Banking Method/ Flex App)

iv. ඕනෑම ලංකා බැංකු ශාඛාවක් මගින් (Bank of Ceylon Teller Slip Payment)

සටහන: ඉහත ක්‍රම මගින් ගෙවීම් සිදු කරනු ලබන ආකාරය පිළිබඳ උපදෙස් වෙබ් අඩවියේ විභාගයට අදාළ තාක්ෂණික උපදෙස් යටතේ පළකර ඇත.

(iii) ගෙවීම ලැබුණු බවට කෙටි පණිවුඩයක් (SMS) මගින් හෝ විද්‍යුත් තැපැල් පණිවුඩයක් (E-mail) මගින් හෝ දන්වනු ලැබේ. විභාග ගාස්තුව සඳහා වන සම්පූර්ණ මුදලම ගෙවිය යුතු වන අතර විභාග ගාස්තුව අඩුවෙන් හෝ වැඩියෙන් ගෙවා ඇති අයදුම්පත් ප්‍රතික්ෂේප කරනු ලැබේ. ඉහත සඳහන් ගෙවීම් ක්‍රම මගින් විභාග ගාස්තු ගෙවීමේදී සිදුවන දෝෂ සම්බන්ධයෙන් ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව වගකියනු නොලැබේ.

(iv) විභාගය සඳහා ගෙවන ලද මුදල කිසියම් හේතුවක් නිසා ආපසු ගෙවනු/වෙනත් විභාගයක් සඳහා මාරු කරනු නොලැබේ.

(v) අයදුම්පත් ඉදිරිපත් කිරීම අවසාන දිනය දක්වා ප්‍රමාද කිරීමෙන් ඇති වන ඕනෑම අහිතකර තත්ත්වයක් අයදුම්කරුවන් විසින් විඳ දරාගත යුතුය.

(vi) විභාග නිවේදනයේ සඳහන් සුදුසුකම් සපුරා ඇති අයදුම්කරුවන් පමණක් අයදුම් කර ඇතැයි යන පූර්ව නිගමනය මත අයදුම්පත් භාරගන්නා අවසාන දිනට හෝ එදිනට පෙර නියමිත විභාග ගාස්තුව ගෙවා අයදුම්පත් නිවැරදිව මාර්ගගතව යොමු කොට ඇති අයදුම්කරුවන් වෙත විභාග කොමසාරිස් ජනරාල් විසින් මාර්ගගතව පමණක් විභාග ප්‍රවේශ පත්‍ර නිකුත් කරනු ඇත.

(vii) අයදුම්කරුවන්ට ප්‍රවේශ පත්‍ර නිකුත් කළ වහාම ඒ බව සඳහන් කරමින් නිවේදනයක් ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ නිල වෙබ් අඩවියේ පළ කරනු ලබන අතර අයදුම්කරුවන් වෙත කෙටි පණිවුඩයක් මඟින් ද දැනුවත් කරනු ලැබේ. තම ප්‍රවේශ පත්‍ර නොලැබූ අයදුම්කරුවකු වේ නම් වෙබ් නිවේදනය සඳහන් ආකාරයට ඒ බව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ ආයතනික විභාග සංවිධාන ශාඛාවෙන් විමසිය යුතුය. එසේ විමසීමේදී අයදුම්කරු තමා ඉල්ලුම්කරන ලද විභාගයේ නම, අයදුම්කරුගේ සම්පූර්ණ නම, ජාතික හැඳුනුම්පත් අංකය, යොමු අංකය හා ලිපිනය නිවැරදිව සඳහන් කර ඉල්ලීම් ලිපියක් වෙබ් නිවේදනයේ සඳහන් විද්‍යුත් තැපැල් ලිපිනය වෙත යොමු කර විමසා සිටීම වඩාත් ඵලදායී වනු ඇත. එසේ විමසීමේදී විභාග දෙපාර්තමේන්තුව විසින් විමසා සිටින කිසියම් තොරතුරක් සනාථ කිරීම සඳහා අයදුම්පතේ පිටපත හා විභාග ගාස්තු ගෙවීමෙන් ලද ලදුපතේ පිටපත සූදානමින් ළඟ තබා ගැනීම ප්‍රයෝජනවත් වනු ඇත.

(viii) ප්‍රවේශ පත්‍රය පරීක්ෂා කර බලා සංශෝධන වෙතොත් ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව අමතා අයදුම්පතට අනුව අදාළ සංශෝධන සිදු කර ගත යුතුය. විභාග ශාලාවේදී හෝ සම්මුඛ පරීක්ෂණයේදී සංශෝධන සඳහා කරනු ලබන ඉල්ලීම් සලකා බලනු නොලැබේ.

(ix) විභාගය සඳහා වන ප්‍රවේශ පත්‍රයේ අයදුම්කරුගේ අත්සන සහතික කර තිබිය යුතුය. කිසියම් රාජ්‍ය ආයතනයකින් විභාගයට ඉල්ලුම් කරන අයදුම්කරුවකු නම් අත්සන ආයතන ප්‍රධානියා හෝ ඔහු විසින් බලය පවරන ලද නිලධාරියකු ලවා ද එසේ නොවන අයදුම්කරුවකු නම් අත්සන රජයේ පාසලක ප්‍රධානියකු/විශ්‍රාමික නිලධාරියකු, කොට්ඨාසයේ ග්‍රාම නිලධාරී, සාමාන්‍ය විනිශ්චයකාරවරයකු, දිවුරුම් කොමසාරිස්වරයකු, නීතිඥවරයකු, ප්‍රසිද්ධ නොතාරිස්වරයකු, ත්‍රිවිධ හමුදාවේ අධිකාරී ලත් නිලධාරියකු, රජයේ හෝ පළාත් රාජ්‍ය සේවයේ හෝ ස්ථිර මාණ්ඩලික ශ්‍රේණියේ නිලධාරියකු හෝ බෞද්ධ විහාරස්ථානයක විහාරාධිපති හෝ නායක ස්වාමීන් වහන්සේ නමක් හෝ අන්‍ය ආගමික පූජ්‍ය ස්ථානයක භාර හෝ පූජ්‍ය පක්ෂයේ සැලකිය යුතු තත්ත්වයක් දරන අයකු හෝ ලවා සහතික කර ගත යුතුය.

(x) විභාග පැවැත්වීම සම්බන්ධයෙන් විභාග කොමසාරිස් ජනරාල් විසින් පනවනු ලබන නීතිවලට විභාග අපේක්ෂකයන් යටත් වේ. එම නීති රීති උල්ලංඝනය කළහොත් විභාග කොමසාරිස් ජනරාල් විසින් පනවනු ලබන දඬුවමකට යටත් වීමට ඔහු හෝ ඇයට සිදුවනු ඇත. විභාග ප්‍රතිඵල සම්බන්ධයෙන් විභාග කොමසාරිස් ජනරාල්ගේ තීරණය අවසන් තීරණය වේ.

11.විභාගයට ඇතුළත් කර ගැනීම

(අ) විභාගයට පෙනී සිටින අයදුම්කරුවන් විසින් තම අත්සන සහතික කරවාගත් ප්‍රවේශ පත්‍රය පළමුවෙන්ම එම ශාලාවේ පෙනී සිටින විභාග දිනයේදී එහි විභාග ශාලාධිපති වෙත ඉදිරිපත් කළ යුතුය.

(ආ) අපේක්ෂකයකු තමාට නියම කර ඇති විභාග ශාලාවේදී විභාගයට පෙනී සිටිය යුතුය.

සටහන :-අපේක්ෂකයකුට විභාග ප්‍රවේශ පත්‍රයක් නිකුත් කිරීම ඔහු ඇය විභාගයට ඉදිරිපත් වීම සඳහා සුදුසුකම් සපුරා ඇති බවට පිළිගැනීමක් ලෙස සලකනු නොලැබේ.

12.අපේක්ෂකයන්ගේ අනන්‍යතාව

විභාග අපේක්ෂකයන් විභාග ශාලාව තුළ තමන් පෙනී සිටින සෑම විෂයයක් සඳහාම ශාලාධිපති සෑහීමකට පත්වන පරිදි ස්වකීය අනන්‍යතාව සනාථ කළ යුතුය. ඒ සඳහා පහත දැක්වෙන ලේඛන පමණක් වලංගු වේ.

I. වලංගු ජාතික හැඳුනුම්පත

II. වලංගු විදේශ ගමන් බලපත්‍රය

III. වලංගු ශ්‍රී ලාංකීය රියදුරු බලපත්‍රය

විභාග අපේක්ෂකයන් අනන්‍යතාව තහවුරු කර ගත හැකි වන පරිදි මුහුණ ආවරණය කිරීමෙන් තොරව හා ඉලෙක්ට්‍රොනික සන්නිවේදන උපාංග පැළඳ ගෙන නොමැති බව සනාථ කිරීම සඳහා දෙකන් ආවරණය කිරීමෙන් තොරව විභාග ශාලාවට ඇතුළු විය යුතුය. ඊට එකඟ නොවන අයදුම්කරුවන් විභාග ශාලාවට ඇතුළු කර නොගැනේ. තව ද විභාග ශාලාවට ඇතුළු වූ මොහොතේ සිට විභාගය අවසන් වී ඉන් පිටවන තෙක් මුහුණු හා දෙකන් ආවරණය කිරීමෙන් තොරව සිටිය යුතුය.

13.මෙහි සඳහන් නොවන යම් කරුණක් වෙතොත්, ඒ සම්බන්ධව සබරගමුව පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාවේ තීරණය අවසාන තීරණය වේ. සියලුම අයදුම්කරුවන් මෙම නිවේදනයේ සඳහන් පොදු විභාග නීතිරීති අනුව කටයුතු කිරීමට බැඳී සිටිනු ඇත.

14. සිංහල හා දෙමළ භාෂා මාධ්‍යයන්ගෙන් පළවන මෙම නිවේදනයේ භාෂා පාඨ අතර යම් අනනුකූලතාවක් ඇතිවුවහොත්, එවිට සිංහල භාෂා පාඨය බලපැවැත්විය යුත්තේය.

2026.09. ෦෭ දින
සබරගමුව පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන්
සභා කාර්යාලය,
සබරගමුව පළාත් සභා සංකීර්ණය,
නව නගරය, රත්නපුර.

එස්.පී.කේ. බෝධිමාන්න
ලේකම්
පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව
සබරගමුව පළාත.

එස්.පී.කේ. බෝධිමාන්න
ලේකම්
පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව
සබරගමුව පළාත.

## சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

## சபரகமுவ மாகாண அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

1. சபரகமுவ மாகாண அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்பாகன திறந்த போட்டிப் பரீட்சை , பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026 டிசம்பர் மாதம் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**<u>கவனத்திற்கொள்ள வேண்டியது</u>**

**இப்பரீட்சை ஒருங்கிணைந்த அரச சேவையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் ஒருங்கிணைந்த ஒரு பரீட்சையாக நடத்தப்படுவதுடன் , இரண்டு சேவைகளுக்கும் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளுக்கு அவர்கள் விரும்பும் ஒரு சேவையைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் **<u>www.doenets.lk</u>** **இணையத்தளத்தில் "Our Service" கீழ் Online Application – Recruitment Exams/E.B.Exams"** ஊடாக விண்ணப்பப்படிவங்களை முன்வைக்க முடிவது நிகழ்நிலையினூடாக (Online) மட்டுமே ஆகும். விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 09.10.2026 ஆகும்.

விண்ணப்பத்தை இணையவழியில் சமர்ப்பித்த பின் அதனை பதிவிறக்கம் செய்து அதன் நகல் பிரதியில் விண்ணப்பதாரரின் கையொப்பமிட்டு, விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதிக்கு அல்லது முன்னதாக "செயலாளர் , மாகாண அரச சேவை ஆணைக்குழு , சபரகமுவ மாகாண சபை , புதிய நகரம் , இரத்தினபுரி " என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது மேல் மூலையில் " சபரகமுவ மாகாண அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்பாகன திறந்த போட்டிப் பரீட்சை-2026 " எனவும் , நீங்கள் வசிக்கும் மாவட்டத்தையும் குறிப்பிடவும்.

குறிப்பு – இணையவழி விண்ணப்பச் செயல்முறை 14.09.2026 ஆம் திகதி காலை 9.00 மணிக்குத் தொடங்கி , 09.10.2026 அன்று இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

இந்தப் பரீட்சை பின்வரும் நகரங்களில் நிறுவப்பட்டுள்ள பரீட்சை மையங்களில் மட்டுமே நடத்தப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் தாங்கள் பரீட்சையில் கலந்து கொள்ள விரும்பும் நகரத்தை தேர்ந்தெடுத்து , இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது பரீட்சைக்கு தோற்ற விரும்பும் நகரத்தையும் அதற்கான நகர எண்ணையும் சரியாக குறிப்பிட வேண்டும்.

| **நகரம்** | **நகர இலக்கம்** |
|---|---|
| **இரத்தினபுரி** | **24** |
| **கேகாலை** | **25** |

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் ,நேர்முக பரீட்சைக்கு உட்படுத்தி பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 15/90 அமைய மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் சபரகமுவ மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு நியமிப்பதற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

3. (அ). வழங்கப்படும் நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நடைமுறைக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு தொகை வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரத்தை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

(ஆ). அரச சேவை நியமனங்கள் நிர்வகிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும் , சபரகமுவ மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் , அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது அதன் பிறகு செய்யப்படும் திருத்தங்களுக்கும் , தாபனவிதிக் கோவை மற்றும் நிதிப்பிரமாணக்குறிப்பின் ஏற்பாடுகளுக்கும் உட்பட்ட வகையில் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் சபரகமுவ மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

(இ) இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். சபரகமுவ மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்களுக்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடுள்ளவாறு முதலாம் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஈ).நியமனத்திற்காக தெரிவு செய்யப்படின் நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமையை பூர்த்தி செய்த மொழியின்படி 16.10.2020 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இணைந்த வகையிலான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி உங்களால் அரசகரும மொழித் தேர்ச்சியை உரியபடி பூர்த்தி செய்தல் வேண்டும்.

4. 25.03.2025 ஆம் திகதி 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் சம்பள குறியீடு MN 02 -2025 இவ் பதவிக்கு உரித்தாவதுடன் அதற்குரிய சம்பள அளவுத் திட்டம் ரூபா 48,470 – 10 x 540-11x 630-10 x 1010-10 x 1190 - ரூபா 82,800.00 என்பதுடன் அச் சம்பள அளவுதிட்டத்திற்கு 01.01.2027 ஆம் திகதியில் இருந்து உரித்துடையவர்களாவீர்கள். நியமனம் செய்யப்படும் திகதியிலிருந்து உங்களுக்கு இச் சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளின்படி சம்பளம் வழங்கப்படும்.

5. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிக்க வேண்டும். அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு அமைய செலுத்தல் வேண்டும்.

6. **தகைமைகள் :-**

சபரகமுவ மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்குரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையவையாகும்.

(அ) விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்தர வதிவு இல்லையெனின் , விண்ணப்பதாரியின் துணைவர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் . (அதற்கிணங்க 09.10.2008 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 09.10.1991 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர்)

(இ) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் சபரகமுவ மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் , பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) பின்வரும் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ) மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

2. கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( உயர் தரம்) பரீட்சையில் (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர) அனைத்துப் பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு –

I. கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் திறமைச் சித்தி பெற வேண்டியுள்ள மொழியாக கருதப்படுவது விண்ணப்பதாரி இப் போட்டிப் பரீட்சைக்காக தோற்றும் மொழி ஊடகமாகும்.

II. கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சைக்கு சமனான வேறு , தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் மூலம் நடாத்தப்படும் பரீட்சைக்கு தோன்றி நியமனம் பெறுவதற்கான தகைமையினை வழங்குவதற்கான உரித்தாக்கல் தொடர்பில் இறுதித் தீர்மானம் உரிய கல்வி நிறுவனங்களின் மற்றும் பரீட்சை ஆணையாளரினால் உறுதிப்படுத்தியதன் பின்னர் சபரகமுவ மாகாண கௌரவ ஆளுநரினால் எடுக்கப்படும்.

கவனத்திற்கு – ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் 09.10.2026 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

7. இந்தப் போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% அங்கவீனமுடைய ஆட்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமைபெறும் அங்கவீன விண்ணப்பதாரர்களில் அதிகூடிய புள்ளி மட்டத்தில் உள்ள 3% மாத்திரம் திறமை ஒழுங்குவரிசைப்படி நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர். அதற்காக தகைமை பெறுவதற்கு பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் நூற்றுக்கு நாற்பது வீதம் புள்ளிகளை (40%) பரீட்சாத்திகள் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் , பரீட்சையின் மொத்த

புள்ளிகளில் நூற்றுக்கு ஐம்பது வீதமாவது (50%) பெறுதல் வேண்டும்.அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 27/88 இன்படி அங்கவீனமுடையவர்கள் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

அங்கவீனர்களுக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்து ,நேர்காணலுக்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள் தகுதியைச் சரிபார்ப்பதற்காக நேர்காணலுடன் மேலதிகமாக மருத்துவப் பரிசோதனைக் குழுவிற்கும் முன்னிலைப்படுத்தப்படுவார்கள்.மேலும் மருத்துவப் பரிசோதனைக் குழுவினால் அங்கவீனமற்றவர் என்றோ அல்லது அங்கவீன அடிப்படையில் நியமனத்திற்குத் தகுதியற்றவர்கள் என்றோ பரிந்துரைக்கப்படும் விண்ணப்பதாரிகள் நியமனத்திற்குத் தகுதி பெற மாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு – நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது குறித்த வகையில் தமது அங்கவீன புனர்வாழ்வு நிபந்தனைகளின் கீழ் விண்ணப்பிப்பதாக குறிப்பிட வேண்டும் என்பதுடன் விண்ணப்பத்தின் நகல் பிரதியுடன் தொடர்புடைய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதியினையும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அங்கவீனர் அல்லாத ஒருவர் பொய்யான முறையில் அங்கவீனர் என்று குறிப்பிடக் கூடாது.

8. **பரீட்சை நடைமுறை :-**

(அ) இப்பரீட்சை சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தமக்குரிய ஒரு மொழி மூலத்தை தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன் பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் அந்த மொழி மூலத்திலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

| | | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| 01 | மொழியாற்றல் | 100 | 2 ½ மணித்தியாலங்கள் |
| 02 | உளச்சார்பு | 100 | 1 மணித்தியாலங்கள் |

(01) மொழியாற்றல் :

இந்த வினாப்பத்திரம் பரீட்சாத்திகளின் கருத்துக்களை வெளியிடுதல் , கிரகித்தல் , எழுத்துக்களின் பிரயோகம் , மொழியும் மற்றும் கட்டுரையும் , கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல் , கொடுக்கப்பட்ட தரவுகளுக்கு ஏற்ப வரைபுகளையும் அட்டவணைகளையும் தயாரித்தல் , கொடுக்கப்பட்ட பந்திகளை சுருக்கி எழுதுதல் , கொடுக்கப்பட்டுள்ள பல வாக்கியங்களின் கருத்தை தனி வாக்கியமாக எழுதுதல் , எளிய இலக்கணப் பயன்பாடு தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்கான விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்

(02) உளச்சார்பு :

இந்த வினாப்பத்திரம் பரீட்சாத்திகளின் கணக்குத் திறன் , தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் , பொதுவான நுண்ணறிவு போன்றவற்றை அளவிடும் விதத்தில் வினாக்களைக் கொண்டிருக்கும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை வகையிலான 50 வினாக்களைக் கொண்டிருக்கும் . அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினதும் கடனட்டை மூலம் (Any Bank Credit Cards)

ii. எந்தவொரு வங்கியினதும் வரவட்டை மூலம் (Any Bank Debit Cards)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமையின் மூலம் (Bank of Ceylon Online Banking Method)

iv. எந்தவொரு இலங்கை வங்கியின் கிளைகளினூடாகவும் (Bank of Ceylon Teller Slip Payment)

குறிப்பு : மேற்கூறப்பட்ட முறைமையின் ஊடாக கொடுப்பனவு செய்யப்படும் முறைமை தொடர்பில் ஆலோசனைகள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

III. கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதென குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் தகவலொன்றின் (Email) மூலம் அறியத்தரப்படும். பரீட்சை கட்டணத்திற்கான முழுப் பணமும் செலுத்த வேண்டியதுடன் பரீட்சை கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைமையின் மூலம் பரீட்சை கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

IV. பரீட்சைக்காக செலுத்தப்படும் பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீள செலுத்த / வேறு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது.

V. விண்ணப்பதாரிகள் , விண்ணப்பங்களை சமர்ப்பிக்க இறுதி திகதி வரையில் தாமதிப்பதால் ஏற்படும் எந்தவொரு எதிர்மறை விளைவுகளையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

VI. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலையினூடாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலையினூடாக மட்டும் பரீட்சை அனுமதிப் பத்திரம் வெளியிடப்படும்.

VII. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்ட உடன் அதனை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ் செய்தியினூடாக அறிவிக்கப்படும். தமது அனுமதி பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்தியொருவர் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளபடி அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையினூடாக விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் , விண்ணப்பதாரியின் முழு பெயர் , தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசத்தினை சரியாக குறிப்பிட்டு தொலைநகலினூடாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றினை விரைவாக பெறுவதற்கு கோரிக்கை கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பொருத்தமானது. அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனும் தகவலொன்றை உறுதிபடுத்துவதற்காக தம்மிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டின் பிரதியினை தயாராக வைத்திருப்பதும் பிரயோசனமானது.

குறிப்பு – கடமை நோக்கங்களுக்காக விண்ணப்பதாரிகளின் தகைமைகளையும் ஆற்றல்களையும் சோதிக்கக் கூடிய வகையில் இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

(அ) இப் பரீட்சையில் தகைமை பெறுவதற்கு விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது நாற்பது வீதமேனும் (40%) பெற வேண்டும் என்பதுடன், பரீட்சையின் மொத்த புள்ளிகளில் ஆகக் குறைந்தது ஐம்பது வீதமேனும் (50%) பெற வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் பெற்ற புள்ளிகளின் ஒழுங்குவரிசை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(ஆ) பரீட்சையின் பெறுபேறுகள் – விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத் தளத்தினூடாக அறிவிக்கப்படும்.

9. **பொய்யான தகவல்களுக்கான தண்டனைகள்**

I. விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாகவும் , சரியாகவும் தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு இணங்க எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரிய வந்தால் , பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்கு பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பதாரர் உரிமையை இரத்துச் செய்ய முடியும்

II. விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று பொய்யானவை என்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அல்லது அவர் வேண்டுமென்றே ஏதேனும் விடயத்தினை மறைத்துள்ளார் என பின்னர் தெரியவரும் போது அவருக்கு தொடர்ந்தும் நியமனம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் இப் பரீட்சையினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ள நியமனமொன்றினை இரத்துச் செய்வதற்கு அல்லது அரசாங்க சேவையிலிருந்து அவரை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **பரீட்சை நிபந்தனைகள்**

I. நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். சிங்களம் அல்லது தமிழில் பூர்த்தி செய்ய ஆலோசனை வழங்கியுள்ள பகுதிகளை மட்டும் சரியாக அம் மொழிகளில் பூர்த்தி செய்தல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பு பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காக தயாரித்துள்ள பொது ஆலோசனை பத்திரத்தினை (Common Instructions) தரவிறக்கம் செய்து , வாசித்து , விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது அவ் ஆலோசனைகளை கடுமையாக பின்பற்றுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும் . விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையினூடாக சமர்ப்பிக்கப்படும் மென்பிரதியை செல்லுபடியான பிரதியொன்றாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் ஏற்கப்பட்டதாக / ஏற்கப்படவில்லையென கட்டமைப்பிற்குள் உள்நுழைய பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) ஊடாகவோ அல்லது (Email) ஊடாகவோ அறிவிக்கப்படும்.

II. பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது நிகழ்நிலை கட்டமைப்பினூடாக வழங்கப்படும் கீழ்வரும் கட்டண செலுத்துகை முறையின் கீழ் மட்டும் கொடுப்பனவினை செய்தல் வேண்டும்.

VIII. அனுமதி அட்டையைப் பரிசோதித்து மாற்றங்கள் ஏதும் இருப்பின் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தை அழைத்து விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ற வகையில் குறித்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தின் அல்லது நேர்முகப் பரீட்சையின் போது திருத்தம் தொடர்பாக முன்வைக்கப்படும் வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

IX. பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால், ஏனைய விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் /ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தரினால் , பிரிவின் கிராம உத்தியோகத்தரினால் , சமாதான நீதவானால் , சத்தியப்பிரமாண ஆணையாளரினால் , சட்டத்தரணியினால் , பிரசித்த நொத்தாரிசினால் , முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் , அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பௌத்தமத விகாரையின் விகாராதிபதியினால் அல்லது தலைமை மத குருவினால் அல்லது வேறு மத ஸ்தலத்திற்கு பொறுப்பாகவுள்ள அல்லது மத குருவாக குறிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையையுடைய ஒருவரினால் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும்.

X. பரீட்சை நடத்தல் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுகுதல் வேண்டும். அவ்வாறான சட்டதிட்டங்களை மீறும் பரீட்சார்த்திக்கெதிராக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டணைக்கு பரீட்சார்த்தி ஆளாக நேரிடும்.

11. பரீட்சைக்கு உள்வாங்குதல்

(அ) பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றும் நாளில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தியொருவர் தமக்கு நியமிக்கப்பட்டுள்ள மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சாத்திகளும் பின்பற்ற வேண்டிய சட்டக்கோவையொன்று இவ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

**குறிப்பு** : விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குதலானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படக்கூடாது.

12. பரீட்சார்த்திகளின் அடையாளம் :

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் தமது அடையாளத்தை உறுதிபடுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை இலக்கம்
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும் பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிபடுத்தக்கூடியவாறு முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை

உறுதிப்படுத்துவதற்காக இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்தில் இருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் விண்ணப்பதாரியை அடையாளம் காணக் கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருக்க வேண்டும்.

13. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் , அது தொடர்பில் சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானது.சகல விண்ணப்பதாரிகளும் இந்த அறிவித்தலின் பொது பரீட்சை விதிகளுக்கு இணங்க கடமைப்பட்டுள்ளனர்.

14. இதன் சிங்களம் மற்றும் தமிழ் அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் , அச்சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுள்ளதாகவிருக்கும்.

07 .09.2026 திகதி
சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு
சபரகமுவ மாகாண கட்டிடத்தொகுதி
புதிய நகரம்
இரத்தினபுரி.

எஸ்.பீ.கே.போதிமான்ன
செயலாளர்
மாகாண அரச சேவை ஆணைக்குழு
சபரகமுவ மாகாணம்.

S.P.K. Bodhimanna
Secretary
Provincial Public Service Commission
Sabaragamuwa Province